*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* வினா எண் 348, திரு. செ. து. வரதராஜன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**348—**

## நிலத்தடியில் கேபிள் அமைத்தல்

***21930—**திரு. செ. து. வரதராஜன்:*

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கடற்கரை ஓரம் உள்ள மீனவர் ஊர்களில் உப்புக் காற்றால் அலுமினியம் ஒயர்கள் துருபிடித்து மின்சாரம் வழங்குதல் பாதிக்கப்படுவதால், நிலத்தடியில் கேபிள் அமைக்க அரசு முன்வருமா?

*மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடற்கரை ஓரம் உள்ள மீனவர் ஊர்களில், நிலத்தடியில் மின்சார கேபிள் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

*திரு. செ. து. வரதராஜன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடற்கரையோரங்களிலே உள்ள மீனவர்கள் குப்பம் கடற்கரையில் மிகவும் நெருங்கிய இடத்தில் இருக்கின்ற காரணத்தினால் உப்புக்காற்று பட்டு அலுமினியம் ஒயர்கள், ஜம்பர்கள் எல்லாம் துருப்பிடித்துவிட்டு, இரும்பு ஒயர்கள் எல்லாம் அறுந்து போகின்ற நிலையிலிருந்து, வோல்டேஜ் மிகவும் கம்மியாக வருகிறது. அதனால் அங்கேயிருக்கின்ற அந்த மீனவக் குப்பங்களில் விளக்குகள் எரிவது இல்லை. குறிப்பாக டி.வியில் ஒரு செய்தியைக் கேட்பதற்குக் கூட அங்கே எந்த வசதியும் இல்லை. வோல்டேஜ் கம்மியாக இருக்கின்ற காரணத்தினால் பார்க்க முடியவில்லை. உப்புக் காற்று அடிக்கின்ற காரணத்தினால் அங்கேயிருக்கின்ற ஆர்.சி.சி. கம்பங்கள் எல்லாம் உளுத்து போய் அங்கே நிற்கின்ற எந்த நேரத்திலும் கீழே விழுகின்ற ஒரு அபாய நிலை இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதிகளுக்கு யு.ஜி. கேபிள் போட்டு இணைப்பு கொடுத்தோமேயானால் அரசுக்கும் இலாபம்; அங்கேயிருக்கிற மீனவப்பெருங்குடி மக்களுக்கும், ஏழை மக்களுக்கும் அது நன்மையாகப் பயன்படும். மின்சாரமும் அதிகமான வோல்டேஜினால் மின்சாரம் கசிவு ஏற்படாமல் அரசுக்கு இலாபம் ஏற்படும். இதைச் செய்ய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

[1995 ஏப்ரல் 19

*மாண்புமிகு திரு. எஸ் கண்ணப்பன்:* மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடலோரப் பகுதிகளில் அமைக்கப்பட்டிருக்கும் மின் பாதைகளில் மின் கடத்திகள், அதாவது கண்டக்டர்ஸ் உப்புக் காற்று படிந்து துருப்பிடிக்கும் பாதிப்பு ஏற்படாவண்ணம் இக்கம்பிகள் மேல் ஒரு விசேட வகையான கிரீஸ் - செவல் பார்முலா என்ற சீ. கிரீஸ் அல்லது அதற்குச் சமமான கிரீஸ் பூசப்படுகிறது. இதன் மூலம் உப்புக் காற்று பாதிப்பு தவிர்க்கப்படுகிறது. மேலும் நீண்ட கால அடிப்படையில், கடலோரங்களில் அமைக்கப்படும் புதிய மின் பாதைகளில் ஏ.சி.எஸ்.ஆர். கண்டக்டர்ஸ் என்ற கம்பிகளுக்குப் பதிலாக இப்பொழுது அலுமினிய உலோக கலவைக் கம்பிகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வகை அலுமினிய உலோகக் கம்பிகள் உப்புக் காற்றினால் பாதிக்கப்பட மாட்டாது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இவற்றிற்கு மேல் பூச்சு பூசவும் தேவையில்லை. மேலும், தமிழ்நாட்டில் சென்னை, செங்கை-எம்.ஜி.ஆர்., தென்னாற்காடு, நாகப்பட்டினம்-காயிதே மில்லத், புதுக்கோட்டை, இராமநாதபுரம், பசும்பொன் - முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம் போன்ற மாவட்டங்களில் கடலோரப்பகுதிகளில் மின் வினியோகச் சீரமைப்பை உறுதிப்படுத்துவதற்காக ஏறத்தாழ 332 கோடி ரூபாய் செலவில் ஒரு சிறப்புத் திட்டம் ஒரு ஸ்பெஷல் ஸ்கீம் ஒன்று,உலக வங்கி உதவி கோருவதற்கு தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது. இதுபோன்ற கடற்கரை பகுதியிலே இந்த மாதிரி பாதிப்பு எதிர்காலத்திலே நிகழாவண்ணம் தடுப்பதற்கு இந்த திட்டம் வழி வகுக்கும். ஆகவே இந்த திட்டத்திற்கு மத்திய அரசினுடையே ஒப்புதலை பெறுவதற்காக தமிழக அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. இத்திட்டத்திற்கு நிதி உதவி கிடைத்தால் கடலோரப் பகுதிகளில் மின் கம்பி சீரமைப்பு, கூடுதல் திறன் கம்பிகள் அமைத்தல் முதலிய மின் விநியோக மேம்பாட்டிற்கான பணிகளை முடிக்க இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, கேபிள்களை நாம் பதிக்கின்றபோது கடலோரப்பகுதிகளிலே அதிகமான செலவினங்கள் ஏற்படுகிறது. ஆகவே, கேபிள்களுக்கும் பாதுகாப்பற்ற சூழ்நிலை வருகிறது. ஆகவே, கடலோரப்பகுதிகளில், தனிமைப்பட்ட பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே கீழே பூமிக்கு அடியிலே செல்கின்றபோது அவை பல்வேறு வகைகளிலே பாதிக்கப்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அதற்கு அதிகமான செலவினங்கள் செய்து கேபிள்கள் பதிப்பதற்குப் பதிலாகத்தான், இந்தப் பிரச்சினையை அரசு இன்றைக்கு உலக வங்கியினுடைய துணையோடு தீர்ப்பதற்கு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இதற்கிடையே கண்டக்டர்ஸ் மாற்றுவதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1995 ஏப்ரல் 19]

முற்பகல் 10-40

திரு. செ.து.வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் முதலிலே சொன்னபோது நான் ஆச்சரியப்பட்டேன். எதையும் சாதிக்கும் வல்லமை படைத்தவர்கள், இதையும் சாதித்து கொடுப்பார்கள் என்கிற நம்பிக்கையில் நான் எதிர்பார்த்தது வீணாகாமல் மிகத் திறமையான முறையில் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்ததைக் கேட்டு மீனவ பெருங்குடி மக்கள் எல்லாம் மிகவும் பெருமைப்படுகின்ற அளவிற்கு, மகிழ்ச்சியடைகின்ற அளவிற்கு. பதில் அமைந்திருப்பதற்கு என்னுடைய நன்றியைச் சொல்லி, மீனவக் குப்பங்கள் எல்லாம் 3 கிலோ மீட்டர், 4 கிலோ மீட்டர் தொலைவிலே இருக்கின்றன. 3 கிலோ மீட்டர், 4 கிலோ மீட்டர் தொலைவிலே இருக்கின்ற அந்தப் பகுதிகளில் 440 கே.வி. லைன் வருகின்ற காரணத்தினால் அங்கே மின்சாரம் மிகத் தொய்வாக வருகிறது. பெரிய குப்பங்களாக இருக்கின்ற பகுதியில் ஒரு டிரான்ஸ்பர்மரை அமைத்து அங்கே மின்சாரத்தை கொடுப்பார்களேயானால், வோல்டேஜ் பாதிப்பு இல்லாமல் அரசுக்கும் இழப்பு இல்லாமல் இருப்பதற்கும், ஏழை மக்களுக்கு உதவுகிற வகையில் அந்த டிரான்ஸ்பார்மர்கள் அமைக்கின்ற பணியை செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ் கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. வரதராஜன் கேள்வி கேட்கிறபோது, அவருக்கு பதில் சொல்வதற்கு சரியான விளக்கங்களை நான் வைத்துக்கொள்ள வேண்டும் என்பது எனக்குத் தெரியும். ஏனென்று சொன்னால், எலக்ட்ரிக்கல் அசோசியேஷனில் அவர் ஒரு பொறுப்பு வகித்துக் கொண்டிருக்கிறார். ஆகவே, அது சம்பந்தப்பட்ட தொழில்நுட்பங்கள் எல்லாம் அவருக்குத் தெரியும். ஆகவேதான் இதுபோன்ற உபயோகமான கேள்விகளை அவர் கேட்டுக்கொண்டிருக்கிறார். அது உண்மையிலே பாராட்டுக்குரியது. இன்றைக்கு டிரான்ஸ்பர்மர்களை அமைக்கின்றபோது, அந்தப் பகுதியிலே இருக்கின்ற மின் அழுத்த விநியோகத்தைப் பொறுத்துதான் புதிய டிரான்ஸ்பார்மர்களை அமைக்கிறோம். எங்காவது 'லோ வோல்டேஜ்' அதாவது குறைந்த அழுத்தம் என்று புகார்கள் வருகின்றபோது, புதிய மின் மாற்றிகளை அமைப்பதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுத்து வருகிறது. ஆகவே, பெரிய குப்பம், சின்ன குப்பம் என்று பார்ப்பது கிடையாது. அந்தப் பகுதியிலே லோ வோல்டேஜ் இருக்கிறது என்று தெரிவிப்பார்களேயானால் உடனடியாக மின் மாற்றிகளை அமைப்பதற்கு மின்சார வாரியம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. தேவையான மின் மாற்றிகள், டிரான்ஸ்பார்மர்கள் கையிலே இருப்பில் இருக்கின்றன. ஆகவே, அந்தப் பகுதியை நீங்கள் எழுத்து மூலம் எழுதித் தர வேண்டும். அந்தப் பகுதிகளுக்கெல்லாம் உடனடியாக மின் மாற்றிகள் அமைப்பதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* திரு. ம. தனபால்.

*திரு. ம. தனபால்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழை வெள்ளம், புயல் போன்ற இயற்கை சீற்றங்கள் எல்லாம் ஏற்படுகின்றபோது கடற்கரை பகுதியிலே இருக்கின்ற அந்த மீனவ குப்பப் பகுதிகள் மிகவும் பாதிக்கப்படுகின்றன. அந்த நேரத்திலே மின் கம்பிகள் அறுந்து விழுவதும், கம்பங்கள் சாய்ந்து விழுவதும் மிகுந்த சேதத்தை மின்சார வாரியத்திற்கு உருவாக்குவது மட்டுமல்லாமல், உயிர்ச் சேதங்களும் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. எனவே, இவற்றையெல்லாம் பார்க்கின்றபோது அந்தக் கேபிள் சிஸ்டத்தையே கொண்டுவர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புயலும், வெள்ளமும், மழையும் எல்லாக் காலங்களிலும் ஏற்படுவதில்லை. ஏதோ குறிப்பிட்ட ஆண்டுகளிலேதான் ஒரு 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை, 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை அல்லது சில நேரங்களில் 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை என்றுதான் வருகிறது. ஆகவே, எப்போதாவது வருகின்ற மிகப் பெரிய சீற்றத்திற்கு - சாதாரண காலங்களிலே அப்படி பாதிக்கப்படுவதில்லை. பெரிய அளவிலே இயற்கையின் சீற்றங்கள் ஏற்படுகிறபோது ஓரளவு பாதிப்பு ஏற்படுகிறது என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட நேரத்திலே உடனடியாக நிவாரணப் பணிகளை நாம் மேற்கொண்டு மின்கம்பங்களை உடனடியாக மாற்றி, மின் மாற்றிகளை உடனடியாக மாற்ற நடவடிக்கையை நாம் எடுத்திருக்கிறோம் போர்க்கால அடிப்படையிலே. ஆகவே, அதிக செலவினம் ஏற்படக்கூடிய சூழ்நிலையிலே, இன்றைய சூழ்நிலையில் புதிய கேபிள்கள் அமைக்கின்ற திட்டம் மின்சார வாரியத்திடம் இல்லை. செலவினங்களை இப்போது அதிகமாக ஏற்றுக்கொள்கின்ற அளவிற்கு மின்சார வாரியம் தயாராக இல்லை, என்கிற காரணத்தினாலேதான் அந்தப் பகுதி மக்களுக்கு இதுபோன்ற நிரந்தர திட்டங்களை தீட்டுவதற்கு உலக வங்கியோடு நாங்கள் தொடர்பு கொண்டு முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறோம். வெகுவிரைவில் இந்தப் பணிகள் நடைபெற்றவுடன் அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* வினா எண் 349, டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.